ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1721/19 - 2011 අගෝස්තු 30 වැනි අඟහරුවාදා - 2011.08.30
*1721/19 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 21/1978* (viii).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25 அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி அமைச்சர், திசாநாயக்க முதியான்சலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ள சவுத் ஏசியன் இன்ஸ்ரிரியுற் ஒவ் ரெக்னொலொஜி அன்ட் மெடிசின் (பிறைவட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, இக்கட்டளை மூலமும், இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், சவுத் ஏசியன் இன்ஸ்ரிரியுற் ஒவ் ரெக்னொலொஜி அன்ட் மெடிசின் (பிறைவட்) லிமிட்டெட்டை மருத்துவ மாணி மற்றும் அறுவை மருத்துவ மாணி (எம். பீ. பீ. எஸ்.) பட்டமளிப்பதற்கு இட்டுச் செல்கின்ற வகையில், அதன்கண் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துக்காகப் பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக ஏற்று அங்கீகரிக்கின்றேன்.

திசாநாயக்க முதியான்சலாகே
சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2011, ஓகத்து 29.

**அட்டவணை**

**ஏற்புடையற்பாலனவான நிபந்தனைகள்**

1. பட்டத்துக்கு முன்னரான போதனை நிறுவனங்களில் உள்ள நிரந்தரக் கல்விசார் பணியாட்தொகுதியினரையும் வைத்திய நிபுணர்களின் விசாலிக்கப்பட்ட பீடத்தையும் கவனத்துட்கொண்டு, தோதான மாணவப் பணியாட்தொகுதியினர் விகிதத்தைப் பேணுதல்.

2. பின்வருவன தொடர்பில் தொடர்ச்சியானதும், இடையறாததுமான ஈடுபாட்டை வழங்குதல் :-

(அ) தேவைப்படக்கூடியவாறாகச் சொற்பிரயோகம் தொடர்பான அத்தகைய திரிபுகளுட்பட, மருத்துவ மாணி மற்றும் அறுவை மருத்துவ மாணி (எம்.பீ.பீ.எஸ்.) பட்டமளிப்பதற்கு இட்டுச் செல்கின்றவகையில், பீடத்தினால் விசாலிக்கப்பட வேண்டிய போதனையும் கல்விசார் நிகழ்ச்சித் திட்டமும் ;

(ஆ) ஒன்றில் அதன் சொந்தப் போதனாவைத்தியசாலைகளில், அல்லது வேறெவையேனும் போதனா வைத்தியசாலைகளுடனான உடன்படிக்கையின் மூலம் பீடத்தினால் பிணியாய்வு மருத்துவப் பயிற்சி நடாத்தப்படுதல் தொடர்பாக ஒழுங்கு செய்யப்பட வேண்டிய வசதிகள் ;

(இ) இக்கட்டளை வலுவுக்கு வருகின்ற திகதியிலிருந்து பதினெட்டு மாத காலப்பகுதிக்குள் பேராசிரியர்சார் கூறுகளைத் தாபித்தல்.

3. விடயத்துக்கேற்ப, மாணவர்களை அனுமதித்தல், மாணவர் அலுவல்கள், கல்விசார் அலுவல்கள், வைத்தியசாலை மற்றும் வேறு சுகாதார வசதி உறவு முறைகள், தொழில் மற்றும் திட்டமிடுதல் என்பன தொடர்பிலான பொறுப்புச் சுமத்தப்படவேண்டியவர்களும், வேறு நிர்வாகப் பணிகளைப் புரியவேண்டியவர்களுமான போதிய நிர்வாக ஆளணியினர் ஆட்சேர்க்கப்படுவதனை உறுதிப்படுத்துதல்.

4. இக்கட்டளை வலுவுக்கு வருகின்றதிலிருந்து ஒரு மாதத்தினுள், நிறுவனஞ்சார் பரிசீலனைக் குழாத்தின் விதப்புரைகளுக்கிணங்க, (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு.

(அ) தோதான கல்விசார் மற்றும் நிர்வாகப் பணியாட்டொகுதியினரின் ஆட்சேர்ப்புத் திட்டத்தையும் ;

(ஆ) ஐந்தாண்டுகளுக்குக் கூட்டிணைப்புத் திட்டத்தின் இறுதிப் பிரதியையும், அத்துடன் ;

(இ) சவுத் ஏசியன் இன்ஸ்ரிரியுற் ஒவ் ரெக்னொலொஜி அன்ட் மெடிசின் (பிறைவேட்) லிமிட்டெட்டைத் தாபித்தல் தொடர்பான நம்பிக்கைப் பொறுப்புறுதியையும்

சமர்ப்பித்தல்.

5. இக்கட்டளை வலுவுக்கு வருகின்றதிலிருந்து ஆறு மாதங்களினுள், பேராசிரியர்சார் கூறுகளை நிர்மாணிக்கும் நோக்கத்துக்கான நிர்மாணக் கடனாக ஆறுநூறு மில்லியன் ரூபாவை (600,000,000 ரூபா) கடனாகப் பெறுதல் தொடர்பில் இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட முனைவுக் கடிதத்தை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல்.

6. இக்கட்டளை வலுவுக்கு வருகின்றதிலிருந்து ஒரு மாதத்தினுள், அதன் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் முறையான பணியாற்றுகையையும் நிர்வாகத்தையும் உறுதிப்படுத்துவதற்குப் போதிய நிதி மூலவளங்களின் எண்பிப்பையும், மூலதனச் செலவின வரவு செலவுத் திட்டத்துக்கான ஏற்பாடுகளுடன் சேர்த்து தேவைப்படக்கூடியவாறான அத்தகைய விபரங்களுடன் ஐந்தாண்டு காலப்பகுதிக்கான நிதித் திட்டத்தையும் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்தல்.

7. இக்கட்டளை வலுவுக்கு வருகின்றதிலிருந்து ஆறு மாதங்களினுள் பின்வருவன தாபிக்கப்படுவதனையும் ஏற்பாடு செய்யப்படுவதனையும் உறுதிப்படுத்துதல் :-

(i) விரிவுரை அரங்கங்கள் ;
(ii) கேட்போர் கூடங்களும் பரீட்சை மண்டபங்களும் ;
(iii) சிறுதொகுதிப்பயிற்சி அறைகள்.
(iv) ஆய்வுகூடங்களும் நூதனசாலைகளும் - உடற்கூற்றியல், உடலியங்கியல், உயிரியவேதியல், நுண்ணுயிரியல், ஒட்டுண்ணியியல் மற்றும் நோயியல் துறைகள், கொடுக்கப்பட்ட ஏதேனும் நேரத்தில் அடங்கியுள்ள மாணவர் தொகுதியினருள் மூன்றிலொரு பங்கினருக்கு இடவசதியளிக்கக்கூடியனவும், அதே எண்ணிக்கையினரான ஒவ்வொரு மாணவருக்கும் நுண்ணோக்கிகளுடனும் ஆன ஆய்வுகூடங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் அல்லது கொடுக்கப்பட்ட ஏதேனும் நேரத்தில் அத்தயை தொகுதியிலுள்ள மொத்த எண்ணிக்கையினரான மாணவர்களுக்கு இடவசதியளிக்கக்கூடியனவும், ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு நுண்ணோக்கியை அளிக்கக்கூடியனவுமான பல்துறைநெறிசார் ஆய்வுகூடங்களைத் கொண்டிருத்தல் வேண்டும் ;

உடற்கூற்றியல், நோயியல் மற்றும் சட்டம்சார் மருத்துவத்துறை, தனிவேறான அல்லது சேகரிப்பு நூதனசாலையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(v) விளையாட்டுக்களுக்கும் பொழுதுபோக்குக்குமான வசதிகள் ;
(vi) நூலகங்கள் ;
(vii) தகவல் தொழிநுட்பவியல் வசதிகள் ;
(viiii) ஆராய்ச்சி வசதிகள் ;
(ix) மருத்துவக் கல்விக்கான கூறுகள் ;
(x) காலத்திற்குக் காலம் ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்படக்கூடிய வேறு தொடர்புபட்ட வசதிகள்.

8. இக்கட்டளை வலுவுக்குவருகின்ற திகதியன்று அல்லது அதன்பின்னர் சவுத் ஏசியன் இன்ஸ்ரிரியுற் ஒவ் ரெக்னொலொஜி அன்ட் மெடிசின் (பிறைவட்) லிமிட்டெட்டுக்கு அனுமதி நாடுகின்ற மாணவர்களுக்கு இக்கட்டளை ஏற்புடையதாதல் வேண்டும்.

9 - 429

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.